www.padippakam.com

PARVAI

T. GUGAN

தமிழர் ஒளி மாத வெளியீடு



ஆசிரியர்: செல்வம்

இணையாசிரியர்: ஜெயராஜ்

அட்டை: யோகன்

வடிவமைப்பு: மூர்த்தி

# பார்வை

L'ASSOCIATION "THAMILAR OLLI" INC. — "THAMILAR OLLI" ASSOCIATION INC.
1225 ST. MARC, SUITE 206, MONTRÉAL, QUÉBEC H3H 2E7 CANADA
TÉL.: (514) 932-9893

படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் சேவையில் 'கான்பை'

## மலிவு... மலிவு... மலிவு... மலிவு... மலிவு...

உங்கள் தேவை
எங்கள் சேவை

இலங்கை இந்திய கனேடிய
உணவுப்பொருட்களையும்

உங்களுக்குத் தேவையான எல்லாவித
- பலசரக்கு வகைகள்
- அன்றாடபாவனைப்பொருட்கள்
- காய்கறி வகைகள்

எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

# CAN BUY
# CHU BOX

5692 VICTORIA AVE MONTREAL
TEL: 345-8622

சகல விதமான இறைச்சிவகைகளும்
எம்மிடம் உண்டு




உங்கள்
தளபாடங்களை
ஏற்றி இறக்க
எங்களையே நாடுங்கள்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பின் ஈழத்தில் உருவாகிவரும் சிங்களக்குடியேற்றங்கள்..

இலங்கைத் தீவானது ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாள் முதல் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் முதலிடம் வகிப்பது, தொடர்ந்து இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஆகும். விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, பெருந்தோட்டம், சமயம் என்ற போர்வையில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் ஈழத் தமிழர் தாயகத்தில் இரண்டாயிரம் சதுரமைல் நிலப்பரப்பு அபகரிக்கப்பட்டுள்ளது. புதிதாக மூன்று இலட்சம் சிங்களவர்கள் உள்ளே நுழைந்துள்ளார்கள். அம்பாறை, சேருவில என்னும் சிங்களத் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

1987 யூலை 27 ஆம் நாளன்று உருவான இந்திய – இலங்கை உடன்படிக்கையின் பின்பு இத்தகைய சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறாதென தமிழ் மக்கள் நம்பினார்கள். நம்ப வைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததிற்கு மாறாக உடன்படிக்கைக்கு முந்திய 40 ஆண்டுகளில் நடைபெற்றதியும் பார்க்க பலமடங்கு வேகத்துடன் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றது. உடன்படிக்கைக்கு முந்திய 40 ஆண்டுகளில் குடியேற்றப்பட்ட சிங்களவரின் எண்ணிக்கை மூன்று இலட்சம். உடன்படிக்கைக்கு பிந்திய 1 1/2 ஆண்டில் குடியேற்றப்பட்ட சிங்களவரின் எண்ணிக்கை 1 1/2 இலட்சம். இதிலிருந்தே சிங்களக் குடியேற்றத்தின் அசுர வேகத்தை யாம் புரிந்து

— நச்சிராக்கினியன்


படிப்பகம்

www.padippakam.com

கொள்ளலாம். இந்திய- இலங்கை உடன்படிக்கைக்கு பிந்திய சிங்களக் குடியேற்றத்தில் முதலிடம் வகிப்பது மணல் ஆறு அல்லது வெலிஓயாத் திட்டமாகும்.

வவுனியா முல்லைத்தீவு , திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களும் சந்திக்கும் இடத்தில் ஏறக்குறைய 28,000 சிங்களவரைக் குடியமர்த்தும் நோக்கத்துடன் நடாத்தப்பட்டுவரும் இத்திட்டத்தினால் சிறியதும் பெரியதுமான தமிழர்களின் பாரம்பரிய கிராமங்கள் நாற்பத்தியிரண்டு பறிபோயிருக்கின்றன. திருகோணமலை மாவத்தில் உள்ள கென்னன் மாவடி, மற்றும் அமரிவயல் பகுதிகள், முல்லைத் தீவிலுள்ள கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, கொல்லன்வெளிக்குளம், பறையன்வெளிக்குளம், மாரியாமுனை ஆண்டான்குளம், குமாரிமுனை, பெரியஆறப்பகுதி, சூரியன் ஆற்றுப் பகுதி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளும், வவுனியா மாவட்டத்திலுள்ள ஊற்றுக்குளம், வெடிவைத்தகல்லு, ஆரிய குண்டான் சோலை, கென்பன்னை, டொலர் பண்ணை, நெடுங்கேணி, ஆகிய பகுதிகளும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மத்திய வகுப்புத் திட்டங்களின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பண்ணைகளும் வெலிஓயாத் திட்டத்தினால் பறிபோகும் பகுதிகளாகும். இத்திட்டத்தினால் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சிறீலங்கா அரசு முனைகின்றது.

1. வெலிஓயாத்திட்டப் பகுதியை அநுராதபுர மாவட்டத்துடன் இணைப்பதன் மூலம் வடமத்திய மாகாண எல்லையை வடகிழக்கு மாகாணங்களுக்கிடையே ஊடறுத்து கடற்


படிப்பகம்

www.padippakam.com

கரைவரை விரிவாக்குமல் இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தொடர்ச்சியான தன்மையினை இல்லாமல் செய்தல் (ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு மாகாணங்களையே இணைக்கலாமென மாகாண சபைச் சட்டம் கூறுவதனை நினைவிற் கொள்க)

2. அநுராதபுர மாவட்டத்தில் தற்பொழுது அடங்கியுள்ள பதவியாப் பகுதியையும், வெலிஓயாப் பகுதியையும் உள்ளடக்கியதாக புதியதொரு சிங்கள மாவட்டத்தை உருவாக்குதல்.

3. காலப்போக்கில் இத்திட்டப்பகுதியினை விரிவாக்கி இதற்கு அருகாமையிலுள்ள இல்மனைட், ரூட்டையில், மொனசைட் சிலிமனைட், செக்கோன் போன்ற கனிவளங்கள் நிறைந்த பகுதிகளை தமிழர்களிடமிருந்து அபகரித்து சிங்களவருக்கு உரித்தாக்குதல்.

4. சிங்களத் தொகையை அதிகரித்து தமிழ்த் தாயகத்தில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்குதல்.

5. வடமாகாணத்திலிருந்து ஓரிரு சிங்களப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்தல்.

6. வெலிஓயாத்திட்டமானது வவுனியா, முல்லைத்தீவு திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றாலும் இம்மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு இதுபற்றி உத்தியோக பூர்வமாக எதுவும் தெரியாது. அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபராலேயே இத்திட்டம்



படிப்பகம்

www.padippakam.com

நிருவாகிக்கப்படுகின்றது. மேலும் இத்திட்டத்திற்குப் பொறுப்பாக இனத்துவேசத்திற்கு பெயர் பெற்ற திரு. பண்டார கொட என்னும் சிங்கள அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

வெலிஓயாத் திட்டம் மட்டுமன்றி வேறு பல திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் இந்திய.-இலங்கை உடன்படிக்கையின் பின்பு தமிழர் தாயகத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அவையாவன:
---------

அம்பாறை மாவட்டத்தின் மகாஓயாப் பகுதியில் 70,000 மேற்பட்ட சிங்களவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வெளியேயிருந்து கொண்டு வரப்பட்டுக் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், இருநாறு வில்லு, பெரிய புல்லுமலை, கெவுளியாமடு ஆகிய இடங்களில் ஏறக்குறை 15000 சிங்களவர்கள் புதிதாகக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் சூரியகுளம், கங்கைப்பாலம் கல்லே- கந்தளாய்காறு, பாலம்போட்டாறு, அண்டான்குளம் கித்துள் ஊற்று ஆகிய பகுதிகளில் ஏறக்குறைய 20000 சிங்கள வர்கள் புதிதாகக் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டு ள்ளார்கள்.

இவை நீங்கலாக வேறு பல சிறிய குடியேற்றங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்திய- இலங்கை உடன்


படிப்பகம்

www.padippakam.com

படிக்கையின் பின்பு மிகத்துரிதமாக நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி அரசியல் கட்சிகளும் போராளி அமைப்புக்களும், சமூகசேவை நிறுவனங்களும் இந்திய அரசினதும் அமைதிப்படையினதும் கவனத்திற்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டு வந்த போதும் இந்திய அரசு இவ்விடயத்தில் பாராமுகமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

---

"ஏழைகளுக்கு நான் உணவளிக்கும் பொழுது
அவர்கள் என்னை புனிதன் என்றனர்.
ஏழைகளுக்கு ஏன் உணவில்லை என்று
கேட்ட பொழுது அவர்கள் என்னை
ஒரு கொம்யூனிஸ்ட் என்றனர்."

+ டொம் கெல்டர் கமரு

---

பார்வை எதிர்பார்க்கின்றது.
---------------------

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்களையும், படைப்பாளிகளிடம் இருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, இலக்கிய, அரசியல், ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றது.

அனுப்ப வேண்டிய முகவரி.

பார்வை,

L'ASSOCIATION "THAMILAR OLLI"
"THAMILAR OLLI" ASSOCIATION
1225 ST. MARC, SUITE 206
MONTRÉAL, P.Q., CANADA H3H 2E7
TEL.: (514) 932-9893

பதிப்பகம்

www.padippakam.com

# தமிழ் சினிமாவும்.. பெண்களும்...

— குமரமூர்த்தி

சகல தரப்பு மக்களிடையேயும் வெகு இலகுவிலும் மனதிற்பதிந்து நிற்கும் வகையில் சென்றடையும் ஒரே ஒரு மக்கள் தொடர்புச் சாதனம் சினிமா என்றால் மிகையாகாது. குறிப்பாக பாமரமக்கள் மத்தியில் வெகு சீக்கிரத்தில் ஊடுருவக் கூடிய சினிமா மீடியம் தான். தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்த வரையிலும் தமிழ்ச் சினிமா உலகம் விதிவிலக்கான ஒன்றல்ல மிகப் பழையதும், மக்களை இலகுவில் கவர்ந்து வந்ததுமான தமிழ் நாடக உலகத்தில் இருந்து தான் தமிழ்ச் சினிமா பரிணாம வளர்ச்சி பெற்றது. அரிச்சந்திரன், இராமாயணம், மகாபாரதம், நளன்தமயந்தி சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பிய நாடகங்கள் நீதி, வீரம், காதல், நாட்டுப்பற்று, சமூகசேவை போன்றவற்றை மக்களிடையே கற்பிக்கும் பாணியில் அமைந்தனவாக இருந்தது. இடையிடையே இருந்த நகைச் சுவைகளும் கருத்துச் செறிந்தனவாகக் காணப்பட்டது. 1950க்கு முன் நாடகங்கள் பலதான் சினிமாவாக மாற்றம் பெற்றன. நாடகத் துறையில் இருந்தவர்கள் தான் சினிமாத் துறையில் வரக்கூடியதாக இருந்தது. 1950க்கு பின் ஏற்பட்ட சினிமாத் துறை வளர்ச்சி சினிமாவைப் பற்றி எதுவும் தெரியாதவர்களைக் கூட சினிமாவுக்குள் கொண்டு வந்து விட்டது. என்றால் மிகையாகாது. இந்த துறைக்கும் சில தர்ம நியாயங்கள் உண்டு

படிப்பகம்

www.padippakam.com

என்பதை பெரும்பாலான சினிமா இயக்குனர்களும் தயாரிப்பாளர்களும் மறந்து விட்டிருக்கின்றார்கள். ஆபாசமும் கவர்ச்சியும் தான் இன்றைய சினிமா உலகில் மேலோங்கி நிற்கும் கருத்துக்களாக மாற்றிவிட்டிருக்கின்றார்கள். அரைகுறை ஆடைகளை அதாவது விரலுக்கு மோதிரம் போட்ட மாதிரி ஆடை என்ற பெயரில் ஏதாவதொன்றை உடுத்திக் கொண்டு தொகைக் கணக்கில் பெண்கள் ஆபாச நடனம் ஆடுவதும், கற்பழிப்புக் காட்சிகள் கட்டாயமாக இடம் பெறுவதும், காதலனால் கைவிடப்பட்ட காதலி தற்கொலை செய்து கொள்வதும் அல்லது வாழ்க்கையை வெறுத்த நிலைக்கு போவதும் அல்லது தேவையில்லாத வில்லன், கதாநாயகன் சண்டையும் கதாநாயகியின் கடத்தலும், சண்டை நடக்கும் போது பயந்து பயந்து மூலைகளில் ஒதுங்கி நிற்பதும் இன்னும் பல பெண்கள் சம்பந்தப்பட்ட எத்தனையோ காட்சிகள். இயல்புக்கு ஒவ்வாத கற்பனைக் காட்சிகள்: புகுத்துவதன் மூலம் இன்னும் பெண்கள் போகப் பொருட்கள் தான் என்பதை நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றது சினிமா உலகம். அவ்வப்போது ஒரு சில தயாரிப்பாளர்கள் கலை, சமூகப் பிரச்சனை வாழ்க்கைப் பிரச்சனை போன்றவற்றை மையமாக வைத்து திரைப் படத்தை எடுக்கின்றார்கள். வெற்றியும் காண்கின்றார்கள். இப்படியானவர்களால்த் தான் தமிழ்ச் சினிமா உலகம் கொஞ்ச நஞ்ச மரியாதையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. என்றால் மிகையாகாது.

ஆனால் இவர்கள் கூட சிலவேளைகளில் மசாலாக்களை எடுத்து மரியாதையை குறைத்துக் கொள்வதுமுண்டு. இன்னொரு வேடிக்கையான விடயம் என்ன வென்றால் மசாலாப் படங்களுக்கும் , ஆபாசப் படங்களுக்கும் கிடைக்கும் வரவேற்பும் வெற்றியும் தரமான சமூக, கலை சம்பந்தப்பட்ட படங்களுக்குக் கிடைப்பது மிகக் குறைவு.


படிப்பகம்

www.padippakam.com

அந்தளவுக்கு தமிழ் சினிமா ரசிகர்களை உருவாக்கி வைத்திருக்கின்றது. தமிழ் சினிமா உலகம், கதைக்கும் காட்சி களுக்கும் சம்மந்தமில்லாமல் கற்பழிப்புக் காட்சியைப் புகுத்துவதும், கனவுப் பாடல் என்ற பெயரில் அரைகுறை ஆடைகளுடனான பாடல்களை இடம் பெற வைப்பதும் சினிமாவில் இது நியதி தானோ என என்னுமளவிற்கு வந்து விட்டது.

கணவன் எவ்வளவு கொடூரமானவனானாலும் தவறுகள் செய்தாலும் கணவனே கண் கண்ட தெய்வம் என பெண்கள் இருப்பதான காட்சிகளை அமைப்பதும் ஒரு முறைதான் அவளின் வாழ்க்கை மலரும் என்றும் கணவனை இழந்த பெண்களுக்கு அவளது விதி அல்லது தியாகி என்றும் பட்டங்கள் சூட்டி விடுவதும் அன்று தொடக்கம் இன்று வரை காட்டப்படுகின்றது.

பெண் ஒரு சுமை தாங்கி என்ற மனப்பான்மையும் சினிமா உலகம் வளர்த்துக் கொண்டு வருகின்றது. அவள் ஒரு தொடர்கதை, சோறு, இப்படி இன்னும் பல திரைப்படங் களை வரிசைப்படுத்தலாம்.

சீதனப்பிரச்சனை அன்று தொடக்கம் இன்று வரை சினிமா உலகத்திலும் அலசப்படுகிற பிரச்சனைதான் ஆனால் எந்த நிலையிலும் இதிற்கான தீர்வை மக்களுக்கு கொடுப்பதில் தவறுகின்றன.

■ எங்கிருந்தாலும் பெண்
சாவி கொடுத்த பொம்மையாக
மூளையைக் கசக்கிக் கொள்ளாமல்
இயங்குவதற் கென
காலங்காலமாக கற்பிக்கப்பட்டிருக்கின்றாள்
தரும தேவதைகள், அன்னபூரணிகள்

படிப்பகம்

www.padippakam.com

கிருகலட்சுமிகள், அழகு தேவதைகள்
இந்த அடை மொழி ஊன்ற சொல்கள் இல்லாமல் நமது பெண்மணிகளால் நடக்க முடியாதுஎன்றுஒரு கவிஞர் பாடுகின்றார்.

சினிமா உலகமும் பழமையைக் கட்டிக் காப்பதில் தான் அக்கறை காட்டுகின்றது.

ஆக மொத்தத்தில் கிளுகிளுப்பை மூட்டுவதும் பொழுது போக்கு என்ற போர்வையில் உருப்படியில்லாத உதவாத கருத்துக்களையும் தான் சினிமா ரசிகர்களுக்கு பெரும்பாலான சினிமாத் தயாரிப்பாளர்கள் அளித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

விதவையாக்கப்பட்ட பெண் அல்லது சமூக அனர்த்தனங்களினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வாழ்க்கையில் தவறி விழுந்த பெண்கள் இவர்கள் சமுதாயத்தில் சகல உரிமைகளுடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். இதற்கான வழி முறைகள் திட்டங்கள் கொண்ட கருத்துச் சினிமாக்களை தயாரிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட பெண்கள் எந்த வகையிலும் குறைந்தவர்களல்ல என்ற கருத்தும் புகுத்தப்பட வேண்டும்.

அடுத்து சீதனப்பிரச்சனையைப் பொறுத்த வரையில் இன்றைய இன்றைய பிரச்சனையின் தார்ப்பரியத்தைப் படம் பிடித்துக் காட்டுவதோடு சரி அல்லது அவ்வப்போது வைக்கப் படும் தீர்வுகளும் கோமாளித் தனமானதும் நடைமுறைச் சாத்திய மில்லாததுமாக இருக்கும். இது எமது தமிழ்ச் சினிமாவின் மிகப் பெரிய குறைபாடாகும். "தலை விதி" "கடவுள் விட்ட வழி" "அதிஷ்ட மில்லாதவன்" இப்படி சில கருத்துக்களை திரும்ப திரும்ப கூறுவதன் மூலம் வளர்ந்து வரும் இளைய தலைமுறைப் பெண்களைக் கூட துணிவில்லாதவர்களாகவும், விரக்தியின் விளிம்புக்கு


படிப்பகம்

www.padippakam.com
செல்பவர்களாகவும் அல்லது முரட்டுத்தனமானவர்களாகவும் ஆக்குவதற்கு வாய்ப்புக்களை அளித்துக் கொண்டிருக்கின்றது.

சீதனப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் திட்டமான நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை முன்வைக்க வேண்டும். இதை எப்படி பெண்கள் எதிர்த்துப் போராட வேண்டும் என்பதும் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

சீதனப் பிரச்சனையை முன்னிட்டு கணவனால் அல்லது மாமியார் நாத்தனார்களால் கொடுமைப்படுத்தப்படும் பெண்கள் அவர்களிடம் கெஞ்சுவதும், மன்றாடுவதும் , அழுது புலம்புவதும், பிறந்த வீட்டுக்கு செல்வதும் அல்லது தற்கொலை முயற்சி வாழா வெட்டியாக இருத்தல் போன்றவற்றைத்தான் சினிமாவிற் பெரிதும் காட்டுகிறார்கள். இது பெண்கள் கோழைகளாகவே இருப்பதற்குத்தான் உதவி செய்யும் மாறாக தன்னைக் கொடுமைப் படுத்துபவர்களைச் சாதுரியமாக எதிர்த்துப் போராடும் வழிகளும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதும், கணவனாயின் விவாகரத்து செய்து கொள்ளவும் பின் அவளே இன்னொரு ஆடவனை மறுமணம் செய்து தனது வாழ்க்கையை நல்ல முறையில் அமைப்பதற்கு அவளுக்கு சகல உரிமைகளும் உண்டு. என்பன போன்ற கருத்துக்கள் காட்டப்பட வேண்டும். "விதி" படத்தில் நல்ல திருப்பு முனை காணப்பட்டாலும் நீதிமன்றத் தீர்ப்புக்குப்பின் அவள் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்து சந்தோசமாக வாழ்வதைக் காட்டி இருக்கலாம். அதாவது வாழ்க்கையில் தவறும் பெண்கள் (மேற்கண்ட வாசகம் பாவிப்பது கூட தவறானது ஆனால் வேறு சொற்றொடர் கிடைக்காததால் இதை எழுதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன்.) மீண்டும் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்." உரிமை இருக்கின்றது. ஒவ்வொருவரும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழப் பிறந்தவர்கள்தான்.

படிப்பகம்

www.padippakam.com

சினிமாவில் மேற்கண்ட கருத்துக்கள் தெளிவாகவும் சித்தரமாகவும் காட்டப்படவேண்டும். ஏழை- பணக்கார படித்த- படிக்காத பெண்கள் என்ற பிரச்சனை இங்கே இல்லை. பெண் விடுதலை என்ற பொதுவான நீரோட்டத்தில் சகல தரப்பினரும் இணைய வேண்டும். சினிமா தயாரிப்பாளர்கள் சமூகத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெண் விடுதலை இயக்கங்களும் இவற்றிற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

—x—x—x—x—

உங்கள் குழந்தையின் பிறந்ததின வாழ்த்தை பார்வையில் பிரசுரித்து மகிழுங்கள்

—'பார்வை' வாழ்த்துகிறது!—

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# கார்கோடன் குறிப்புகள்

அண்மையில் தான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஒரு நண்பரை சந்திக்கச் சென்றிருந்தேன். மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் நாம் சந்தித்துக் கொண்டோம். அன்பான அரவணைப்புகள் வழமையான விசாரிப்புகளுக்குப் பின் எமது சம்பாசணை அரசியல் பக்கமாகத் திரும்பியது. காதோடு காதாக சில விடயங்களை எனக்குக் கூறினார் ( பாவம் அவருக்கு நான் தான் கார்கோடன் என்று தெரிந்திருக்க நியாயமில்லை )

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு என்று அவர்களின் தலைமேல் கட்டி அவிழ்க்கப்பட்டுள்ள மாகாண சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது தெரிந்தது தானே. ஆனால் இந்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு அலுவலகம் கூட இல்லையாம். வடக்கு கிழக்கில் சமாதானப்படை என்ற பெயரில் நிலைகொண்டுள்ள இந்திய இராணுவ முகாம்களுக்குள்ளே இந்த மாகாணசபை உறுப்பினர்களும் முடங்கி இருக்கின்றனராம். மாகாணசபைக்கு என்று ஒரு துரும்பை தூக்கிப் போடும் வேலை கூட இவர்களுக்குஇல்லையாம். மாகாண சபை கூட்டத்துக்கு திருகோணமலைக்கு இந்திய இராணுவத்தின் விமானங்கள், ஹெலிகாப்டர்களில் பறந்து சென்று மாநில முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் என்ன சொன்னாலும் அதற்கு கையை மட்டும் தூக்கி காட்டி



படிப்பகம்

www.padippakam.com

விட்டு மறுபடியும் அதே விமானங்களில் திரும்பி வந்து முடங்கி விடுகின்றனராம்.

" தமிழர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதற்காக இலங்கை- இந்திய அரசுகளால் திட்டமிட்டு அமைக்கப்பட்டதே மாகாணசபை. இதற்கு எந்த அதிகாரமும் கிடையாது. தமிழ் மக்களின் எந்த அபிலாசையும் இது பூர்த்தி செய்யவில்லை என்பது வெட்ட வெளிச்சமாய் உள்ளபோது மாகாண சபை உறுப்பினர் என்ன செய்கிறார் என்று இப்போ யாரப்பா கவலைப்பட்டது என்று நான் கூறினேன்.

" இது எனக்கும் உனக்கும் தெரிகிறது. ஆனால் இந்த மாகாண சபையை காட்டி எமது மக்களை இலங்கை, இந்திய அரசுகள் மட்டுமல்ல இவர்களுக்கு அடிவருடும் எம்மவர்களும் ஏமாற்றப்பார்க்கின்றனரே. இந்த அடிவருடிகளை எம்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்..." என்று கூறி நிறுத்திய எனது நண்பர் " இன்னொரு விடயம் தெரியுமா? என்றார்.

" சொல்லும் " ....என்றேன்.

" இந்திய இராணுவ முகாம்களுக்கு அண்மையாகத்தான் இவர்களுக்கு உடந்தையாக உள்ள தமிழ் இயக்கங்களின் முகாம்கள் உள்ளன. இந்த தமிழ் இயக்கங்களின் முகாம்களில் இருந்து யாராவது அரிசி வாங்க கடைக்குப் போவதாய் இருந்தாலும் இந்திய படையின் "சென்றியை" (காவல் அரண்) கடந்து தான் செல்ல வேண்டும். இயக்க முகாமில் இருந்து யார் யார் வெளியே போகிறார்கள், யார் யார் உள்ளே வருகிறார்கள் என்று இந்திய இராணுவத்தால் கண்காணிக்கப்படுகின்றனர். எந்த ஒரு சம்பவத்தை செய்வதற்கு முன்பும் இந்த இயக்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com

கட்டாயமாக இந்திய இராணுவத்தின் அனுமதியைப் பெறவேண்டும். ஒரு விடுதலைப் புலியை கைது செய்வதாய் இருந்தாலும் சரி, விடுதலைப்புலிகளின் முகாமை தாக்குவதாய் இருந்தாலும் சரிதான் அல்லது விடுதலைப்புலி என்று கைது செய்து விசாரணையின் போது சித்திரவதையின் கொடுரத்தால் இறந்து போன ஒரு தமிழ் இளைஞனை மின்கம்பத்தில் கட்டப்போகிறோம் என்றாலும் சரி இந்திய இராணுவத்தின் அனுமதி வேண்டும். இவை மட்டுமல்ல ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எந்த ஒருவர் வெளியே போவதாய் இருந்தாலும் இந்திய இராணுவத்தின் அனுமதி வேண்டும். என்று நண்பர் கூறினார்.

" இந்திய படைகளுக்கும் இந்த இயக்கங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதில்லையா" என்று ஒரு கேள்வியை தூக்கிப் போட்டேன்.

சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்படத்தான் செய்கின்றன. இந்திய இராணுவம் எமது தேசத்தை அக்கிரமித்துள்ளது என்று இந்த முரண்பாடு எழவில்லை. தம்முடன் இந்திய இராணுவம் அனுசரித்து போவது தொடர்பான சில்லறை கௌரவப் பிரச்சனைகள் தொடர்பாக இந்த முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதாவது தமது எஜமானன் தம்மை கௌரவமாக நடத்த வேண்டும் என்பது இவர்களது அபிலாசை" -

" இந்திய படைகளுக்கு எதிராக வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவத் தாக்குதல்கள் நடைபெறும் போது



படிப்பகம்

www.padippakam.com

இந்திய இராணுவம் வெறித்தனமாக எமது தமிழ் மக்களின் உடமைகளையும் உயிர்களையும் அழிக்கின்றது. இத்தகைய சமயத்தில் என்னதான் இருப்பினும் இந்த இயக்கங்களுக்கும் இந்திய படைகளுக்கும் முரண்பாடு ஏற்படத்தான் செய்யும் என்று மற்றுமொரு கேள்விக்கணையை நண்பர் மீது எறிந்து விட்டு அவரை நோக்கினேன்.

சிறிது நேரம் நண்பர் அமைதியாக இருந்தார். கைகளை பிசைந்து கொண்டார். " எமது மக்களுக்கு தெரிந்தால் அதிர்ச்சி யடைவார்கள். நீ கூட எதிர்பார்க்கமாட்டாய். இது ஒரு கொடுமையான உண்மை. இந்திய இராணுவத்துக்கு எதிராக தாக்குதல் நடாத்தும் பகுதி உள்ள மக்களை தாக்கவும் உடமைகளையும், உயிர்களையும் அழிக்கவும் இந்த இயக்கங்களும் மானசீகமாக உடன்படுகின்றனர், உடன்படுகின்றன என்பதை விட இந்தப் பகுதி மக்களை இந்திய இராணுவம் தாக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். இந்த வெறித்தனமான செயற்பாட்டை சரி என்று தமது அடிமட்ட உறுப்பினர் வரை நியாயப்படுத்துகின்றனர். மக்களின் ஆதரவுடன் தான் புலிகள் இந்திய இராணுவத்தை தாக்குகின்றனர். இவர்கள் விரும்பினால் புலிகளை காட்டிக் தர முடியும். அவ்வாறு காட்டிக் கொடுக்க மறுக்கும் மக்களை தண்டிப்பதன் மூலமே அவர்கள் மறுபடியும் புலிகளுக்கு ஆதரவு கொடுக்க மறுப்பவர்களாக மாற்ற முடியும் என்பதே இந்த விடுதலைப் போராளிகளின் புதிய கண்ணோட்ட மாகும் " - கண்கள் கலங்க கூறினார்.

ஜீரணிக்க கஷ்டமாகத்தான் இருந்தது. அதுவும் தமது நலன்களுக்காக தேசத்தை மாற்றானுக்கு விற்கின்றவர்களிடம்


படிப்பகம்

www.padippakam.com

இதைவிட வேறு என்னத்தை எதிர்பார்க்க முடியும்.

இந்திய இராணுவத்துக்கு அடிவருடியாக உள்ள இயக்கத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இந்திய உளவுப் படை ( RAW ) மாமாந்தம் ஆயிரம் ரூபாய் வரை பணமாயும் உணவாயும் வழங்குகின்றதாம். இந்த வெகுமதியை பெற்றுக் கொண்டு முகாம்களில் திமிர் எடுத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் தனது தேசத்தை காட்டிக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றான்.

எனது நண்பனிடம் விடை பெற்றுக் கொண்டு வரும் போது சிந்தித்துக் கொண்டே வந்தேன்.

சுதந்திரமாகப் பறந்து அழகாகப் பாடிக் கொண்டு திரிகின்ற கிளியை பிடித்து கண்டுக்குள் அடைத்துவிட்ட போட்டமமே அது மூர்க்கத்தனமதாகி விடுகிறது. சுதந்திரத்தைப் பற்றி இந்த கிளிக்கு யாரும் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

அடக்கு முறைகளை பிரயோகிக்கும் போது தான் அதனை தகர்ப்பதற்கான கைகளும் உயர்கின்றன. தனது இறைமை பறிக்கப்பட்ட போது அதற்கு எதிராக குரல் கொடுக்க எந்த தேசமும் மறந்து போனதில்லை.

மாவீரர்கள் என்று புகழப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் எல்லாம் இறுதியில் தோற்றுத்தான் போய் விட்டார்கள். வல்லரசு என்று பாராட்டப்பட்ட ஆக்கிரமிப்பு படைகள் கூட தோற்று விட்டன. ஆனால் வரலாற்றில் மக்கள் மட்டும் தோற்பதேயில்லை. எங்கள் தேசமும் மக்களும் ஆக்கிர மிப்பாளர்களுக்கு அடி பணிந்ததாய் எழுதப்படப் போகும் சரித்திரத்தில் எந்தவொரு குறிப்புகளும் இருக்கப் போவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# கணேஷா

# GANESHA

**அன்று முதல் இன்று வரை**
**மலிவு விற்பனையில் மக்களைத்**
**திருப்திபடுத்திவரும் ஒரே ஸ்தாபனம்**

## கணேஷா

மலிவு விலை:
10 Kg. வெள்ளைப்பச்சை 5.99
10 Kg அரிக்கன் அரிசி 6.99

7244 ST. HUBERT
MONTRÉAL, QUÉ. H2R 2N

**சகலவிதமான இலங்கை,**
**இந்திய, கனேடிய**
**உணவுப்பொருட்களை**
**பெற்றுக்கொள்ளலாம்.**

273-7502 273-3589

இந்தி தமிழ் வீடியோப்படங்களும் கிடைக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# Leadership

**— Sam Sothiraj —**

A millionaire who was running hundreds of business had a leadership problem. He said 'My associates dont respect me'. That embittered every moment of his waking hours. A manager of a big firm had the firm running month after month at a loss. He could not get the whole hearted co-operation of his people. This is leadership problem again. People who try to guide and control the activities of others, also face this problem.

'When the king has a belly ache the people groan' states an old proverb. Its true. Followers suffer the effects of the leaders difficulties. When you have to follow a leader who is not liked by the people ______ It's a kind of hell that people go through. A leader should be alert, courageous, flexible and honest. The leaders honesty should be detected by his followers, and this should attract them and bring loyalty to the leader. True, some people have a natural knack for getting the loyalty and co-operation of others.

Developing a commanding attitude and trying to be aggressive is not leadership. A leader should draw ideas and suggestions from his followers.

படிப்பகம்

www.padippakam.com

Discussions and consultations with the people should be the key notes. A dictatorial attitude of a leader is seldom liked by people democratic leadership is the one best way. Today's leaders are generally self motivated. They try to build up name and fame for themselves and tend to forget the aim and purpose for which they are leading their followers. Invariably the plan the purpose and the goal ends in a miserable failure.

Proper leadership therefore is to forget one's self, suffer whatever comes their way, and achieve their goal. Blood, sweat and tears may be their lot till they win. But Alas! sad to say most of the present day leadership ends up with pride of position. They forget the end toward which all efforts were directed by the followers. Sad but true is the present day leadership of the world..

---

திருவிளக்கு சாய்த்து
பால் கொட்டி
முகம் பிராண்டி
வீடு நாசமாக்கி
தெருக்குப்பை கிளறி
பூரான் தின்று
அண்டை வீட்டோடு சண்டைஇழுத்து
கொக்கரித்துக்
கொலையுண்ட கோழியைச்
சாப்பிடும்போது சொன்னோம்
நல்ல கோழி

திருமேனி

படிப்பகம்

www.padippakam.com

# இங்கும் பலர் ஏய்ந்திடலாம்.. இதுவும் உண்மை..

சஞ்சு

அடமானம் வைத்தே அந்நியநாடு வந்தேன்
எட மானம் எனக்கிருந்தால் இங்கேயோ வருவேன்
திடமான திரவியமும் தனியாத தாகம்– தீர்க்க
வருமானம் ஒன்றே வருங்கால மோகம் – கொண்டு
எதிர்காலம் இனி எமக்கு ஒளிமயமாய் வந்தாலும்
நிகழ்காலம் இன்றைக்கு நிம்மதியை தந்தாலும்
சிலகாலம் சீட்டதனில் சொத்தாகச் சேர்த்தாலும்
வரும் காலம் ஒரு பெனியும் வராது ஊர்போக.

இரவு பகல் இரு வேலை இங்கே செய்து
எவ்வளவுதான் உழைத்தோடிச் சேர்த்திட்டாலும்
ஒரு சதமேனும் மிஞ்சாத உண்மையென்ன
இம்மாதம் சம்பளத்தில் ஏற்றம் பெற்றும்
எல்லாமே செலவாகி இன்றே போச்சு
பலபேர்க்கும் இப்படியோ- போகச் செய்யும்
பாதிகளை பறித்துப் போகும்
மிச்சமது சீட்டினிலே மிதந்து நிற்கும்
மற்றவரும் தந்துதவி "மணிஓடர்" போகும்
எப்படித்தான் எங்களிடம் எஞ்சி நிற்கும் –இதற்குமேல்

படிப்பகம்

www.padippakam.com

பொன்னை சீட் டொன்று பொறிந்து போச்சு

போக்கிரியாய் போவந்து ஞாயமில்லை

இயலாத எங்களிடம் ஏய்த்துக் கொண்டு

சொல்லாது தாச்சிமார் சொந்த ஊரில் நின்று

வந்து விட்டால் வருமதிகள் எங்கேயென்பர்
சிநேகிதமாய் சிரிக்காமல் சீட்டில் சேர்த்து
தருமதியை தராவிட்டால் தப்ப மாட்டீர் என்றும்
வைத்ததுமே வைத்தபடி வாங்கிக் கொள்வர்
பயம் வேண்டாம் பத்தாயிரம் மொத்தமென்பர்.

பாய்ந்துபோய் நாங்களுமோ பங்கைப் பெற்று
பலரோடு சேர்ந்திடுவோம் பத்தாம் ஆளாய்
பத்தாயிரம் மொத்தமென்றார் பலபேரும் பக்தி கொண்டு
சித்தமுடன் சேர்ந்து சீட்டதனை சிறப்பாய் ஏற்றி
முதல் மாதம் மொத்தமதில் முக்காலும் கழிவாய் போய்
முழுகிவர் முதற் சீட்டை எடுத்த பேர்கள்
தப்பவிட்டோட் எத்தக் கெட்ட தம்பிரானே – என்று
மொத்த மதை எண்ணி நாமும் மனக்கோட்டை காண்பிபாம்
மற்றவர்கள் முந்தட்டும் மீதி நானே என்று
முச்சடக்கி முந்த விட்டேன் மொத்தச் சீட்டை
இம்மாதம் இறுதி யென்று அங்கே போனேன்
உனக்கேது இதிலென்று உரத்துச் சொன்னார்
பதிலேதும் சொல்வதற்கு பயந்த நான்
வழியேது இதற்கென்று வடி வாய் கேட்டேன்
சரி நீ போ கதை வேண்டாம் சரியாய் செய்வேன் என்றார்
படியிறங்கிப் பாய்ந்து வந்து பதறிப் போய் மீண்டும்


படிப்பகம்

www.padippakam.com

புரியவில்லை எனக்கென்று புரியக் கேட்டேன்
புரியாதோ இதுவென்று போய்வா என்றார்
எந்நிலைமை ஈழமதில் ஏழைக்கோலம்
ஏழெட்டுத் தங்கைமார் என் கூடப் பெற்றோர்
எப்படியும் என் பணத்தை இன்றே தாரும் என்றேன்
கட்டியது எவ்வளவு என்று கணக்கைக் கேட்டார்
இம்மாதம் இறுதிதானே எனக்கே எல்லாம் மொத்தம் 'என்றார்
கழிவும உண்டோ இனி உனக்கு கட்டியதை மட்டும் தரலாம்
என்று கடிந்து சொன்னார்.

பிடியேதும் இல்லாத பேபணாகி பிசகைத் தீர்க்க வெண்ணி
சரி ஏதோ தந்து விடும் சண்டை வேண்டாம், என்றேன்
என் மனதை அறிந்த அவர் என் அருகே வந்து
மறுபடியும் மொத்தம் முப்பதொன்றில் மடக்கப் பார்த்தார்
கணக்கொடு கணக்காய் கழிந்தும் போகும் என்றார்

ஐயோ அண்ணை அலைவேண்டாம் ஆளை விடு என்று கூறி
அந்நாட்டில் எம்பியாம் அருமை தொண்டரிடம் அவலம் போய் நான்
பணம் கொஞ்சம் வேண்டுமென்று பணிந்து நின்றேன்
ஆயிரமே அனைவர்க்கும் முதலில் என்று அங்கத்தினர் ஆகச் சொல்லி
இருந்த ஐந்து டொலர்களையும் அவரும் வாங்கி
போய்வாரும் தம்பி "மணி ஆடர்" போஸ்டில் பெறுவீர்
இனிமேல் என்னோம் ஒரு சீட்டில் சேர்ந்து பாரும்
என்னாயிரம் கேட்டாலும் எண்ணித் தருவேன் என்றார்

பாவம் ஐயா, "பார்லிமென்டும்" போகாநின்று
தோணியிலே தே வந்தார் தமிழர் வாழும் நாட்டை பின்


படிப்பகம்

www.padippakam.com

பாமர மக்களுக்காய் பாய்ந்து வந்திங்கே
நாம் வதியுமிடமும் தேடி நல் வட்டிக் கடையும் தந்து
நலன் பேணி சுய நலன் காத்து நமைக் காக்க
நாளொரு சீட்டை, நடாத்தி வரும் நாமம் நமசிவாய—வாழ்க
நான் இப்போ நாலு பேரைச் சேர்த்தால் என்ன
நல் வழியோ நம் வழி
ஈழ மதில் எய்த்ததுவோ என்ன உண்மை
இங்கும் பலர் எய்திடலாம் இதுவும் உண்மை

நம்மை மகிமைப்படுத்துவோம்

இதோ !
வலிமை மிக்க வீரர்கள்
வீதியில் ஓலமிடுகிறார்கள்.
சமாதானத்தின் தூதுவர்
கதறி அழுகின்றார்கள்.
நெடுஞ்சாலைகள் பாழாகிக் கிடக்கின்றன.
வழிப்போக்கர்களும் இல்லாமல் போயினர்.
உடன்படிக்கைகள் முறிக்கப்படுகின்றன.
சாட்சிகள் அவமதிக்கப்படுகின்றனர்.
மனிதனுக்கு மதிப்பே கிடையாது.
நாடு கதறி அழுது சோர்வடைகிறது.
லீபான் கலங்கித் தளர்ச்சியடைகிறது.
சாரோன் பாலைநிலம்போல் இருக்கிறது.
பாசானும் கர்மேலும் இலைகளை உதிர்க்கின்றன.
ஆண்டவர் சொல்கிறார் :
"இப்பொழுது நாம் எழுந்திருவோம்.
இப்பொழுது நாம் நம்மை உயர்த்துவோம்.
இப்பொழுது நாம் நம்மை மகிமைப்படுத்துவோம்.

(இசையாஸ் ஆகமம் 33 : 7—10)


படிப்பகம்

www.padippakam.com

# உயரப் பறந்தாலும்...!


என்னுடைய 'நேம்மேற்'
எடுத்தெறிந்து பேசுகிறான்,
அனிபலதான்! எனினும்
ஆத்திரமாய் வருகிறது.

எட்டாயிரம் டாலர்
எங்கெல்லாமோ அலைந்து
வட்டிக்கு 'ரெடி' பண்ணி
வாவென்று கூப்பிட்டான்
கட்டுரையும், கதையும்
கண்டபடியாக் கவிதைகளும்...!
என்ன மயிருக்காய்
இங்கு வந்து சேர்ந்தனி? பார்,
உன்னோடு வந்த
உதயனோ ஆயிரத்தை

படிப்பகம்

எழுதுவதற்குத் தூக்கி
எறிகின்றேன். என்னுடைய
வழுக்கைக்கும் மயிர்நட்டு
வசந்தியையும் கூப்பிட்டான்!
ஊதியக் கைப்பிடித்த
உன்னத மனைவியையும்
பேர்வைத்து விட்டுவந்த
பச்சைக் குழந்தையையும்
கூப்பிட்டு வாழக்
கொடுத்துவைக்க வில்லையே
சாப்பிட்டா லென்ன
விட்டாலும் எனக்கென்ன?

ஆனந்த் பிரசாத்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

சாமர்த்தியம் இல்லாச
சம்சாரி நான், உண்மை!
நா மட்டும் இருக்கிறது;
நானெழுத வில்லையென்று
எவனைய்யா செத்தான்?
எப்படியும் தமிழ் வாழும்.
அவனவனுக்கோர் இங்கே
ஆயிரமாய் அலுவலுண்டு.
கனடாவில் வந்து
கடிகார மாகிவிட்டான்.
மனதாலே வாழுகின்ற
மடையன் நான்! போலிகளைப்
போல முடியாது
பொசுவதும் போவதுமாய்
வேகித் தகித்து
வெம்பிச்சோர்ந்து துடிப்பவன் நான்.
எப்படி நான் இவனுக்கு
இதையெல்லாம் புரியவைப்பேன்?
அப்படியே புரிந்தாலும்
அவனேற்க மாட்டானே!
"பேனைப் பிடித்து
பேப்பரில் கிறுக்கித்
தானா இனிமேல்
தமிழும் தோன்றிவிடும்?

படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கனடாவில்
இருந்த இரண்டாண்டுகளில்
ஐந்து கடன் தீர்த்தாய்.
வேறென்ன? இன்றைக்கும்
மாசம் முடிந்தவுடன்
'மெற்றோ' பாஸ் வாங்கவெனக்
காசு கடன் கேட்பாய்!
கவிஞா! உனக்கென்ன?
நாளொருவேல் இரவுபகல்

நாய் எலும்புடைய
ஆணவரை பாடுபட்டு
அஞ்சு, பத்துப் பார்ப்பதினால்
உன்னையும் நான் தாங்குகிறேன்
உனக்கென்ன? கனவுகளில்
தென்னை விரித்த
திரைகடலும், தோணிகளும்...!
செத்தாலும் இனிமேலச்
சென்மத்தில் இவனிடம் போய்
பத்தும், இருபதும்
பணம் கேளேன்! என்பதனை
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்-
சத்தமாய்ச் சிரிக்கின்றேன்..!!

படிப்பகம்

www.padippakam.com



# MARCHE VICTORIA ORIENTAL INC.

**TWO LOCATIONS**

**MONTREAL**
6324 VICTORIA STREET,
(METRO: PLAMONDON)
TEL: (514) 737-4716.
OPEN 7 DAYS

**WEST ISLAND**
4789 BLVD DES SOURCES,
PIERREFONDS.
TEL: (514) [illegible]
OPEN 7 DAYS
FREE PARKING.

மரக்கறி எண்ணெய் MARINA VEG. OIL 15.99
(SRI LANKA) புழுங்கல் அரிசி PARBOILED RICE 20Kg 32.00
பஸ்மதி அரிசி PASMATHI RICE 5kg. 10.99
FIVE ROSE FLOUR 20Kg 13.99

**• *WE HAVE THE BEST QUALITY No 1 (stone free) JAFFNA S.R. No 1 PARBOILED, RED RICE***

எங்களிடம் தரமான முதல்தரமான கல்லில்லாத S.R.No 1
குத்தரிசி, சிவப்பு.பச்சை என்பனவும் கிடைக்கும்

WE DO WHOLESALE

BUY IN BULK & GET DISCOUNT

பொருட்கள் தொகையாக வாங்குமிடத்து
மேலதிக கழிவு வழங்கப்படும்.

## **** *TAMIL MOVIES 49 C* ****

( 24 Hours with I.D. only)

தமிழ் வீடியோ படங்கள் 49 சதம்.

(தச் சுயமை அடையாள அட்டையுடன், 24 மணித்தியாலம் மட்டுமே)

## *MARCHE VICTORIA ORIENTAL INC.*

படிப்பகம்

www.padippakam.com

# RACISM



LORRAINE ZAVIER

Racism can be defined as the predication of decisions and policies on considerations of race for the purpose of subordinating a racial group or in the otherway the systematized oppression of one race by another. In the United States racism has premeated every sphere of social life; the systematic oppression of blacks has cultural,phychological sexual and political as well as economic demensions. Racism can take two different forms;
1. Individual racism 11. Institutional racism. Individual racism the attitudes and practices of individual: Tamils against Singalese,Whites against blacks. A substantial degree of both individual and institutional racism is evident in Srilanka. Tamils continue to face discriminations in employment,housing, education and colonialism. But still abound racial stereotypes,cultural deprivation,police harassment and so on. How ever in recent decades the overt individual form of racism has been superseded to some extent by the move subtle institutional form of racism. The effects of racism in Srilanka include continued diffrentials in income occupational status,infant mortality rates and many other measures. But very important point should be notified,it has often been argued that racism is an aberration in few countries but not in

படிப்பகம்

www.padippakam.com

Srilanka. For example the United States and South Africa, that was the legacy from the past that must gradually disappear in a democratic capitalist society.

Most people wonder with the question of why then has racism provem so difficult to eradicate in countries like Srilanka, United States and South Africa. But I think that the conventional analysis is inadequate. Racism is not an aberration it has persisted in Srilanka preciously because the oppression of tamils is consistent with the logic class divisions under capitalism of the capitalist class as a whole by contributing to divisions and antagonisms among the population thereby weakening hostility to the capitalist class, and by providing to singalese a convenient scapegoat for a social oppression that is generated by capitalism itself,racism plays an important role in stabilizing a capitalist society. Racism is likely to take firm root in a capitalist society. Racism is useful to capitalism, moreover the hieraichical, materialistic competitive and


படிப்பகம்

www.padippakam.com

individualistic envoirment of capitalism is not conducive to the elimination of racism. It's therefore unlikely that can be eradicated within the frame work of a capitalist society.

Well let's see the point of racism. What is racism ? The word racism has represented daily reality to millions of people for years, may be you can say for centuries. By 'Racism' we mean the predication of decisions and policies on consideration of race for the purpose of subordinating a racial group and maintaining control over the other group. That has been the practice of this country toward the minority man. Racism is both overt and covert. It plays in two ways in a very closely related forms. Individual majority man against minority man, and acts by total majority community against the minority community. These includes Individual racism and Institutional racism. Individual racism can be recorded television cameras, it consists of overt acts by individuals, which cause millions of deaths, injury, the violent destruction of the country but institutional type is less overt for more subtle less


படிப்பகம்

www.padippakam.com

identifiable in termsof specific individuals committing the acts but destructive of human life. Racism is the systematized oppression by one race of another. Why should racial inequality will tend to persist in a monopoly capitalist society. Racism instead of disappearing seems to be on the increase. Often a decrease in one narraw form of discrimination is accomapnied by an increase in another form. Since all aspects of racism interact on analysis of racism should incorporate all its aspects in a unified manner. No single quantitative index could adequatly measure racism in all it. social, cultural, phychological and economic demension . According to someone racism is fundamentality a problem of tastes and attitude.

* கோர்ட்டை (COURT ) நீதிமன்றம் என்று கூறி வருகிறோம் இது மிகவும் தவறானது சட்ட சம்பந்தப்பட்ட வழக்குகளை தீர்த்து வைக்கும் இடம்தான் 'கோர்ட்' அங்கு சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்ப்புகள் அமைகின்றன. நீதியின் அடிப்படையில் தீர்ப்புகள் அமைவதில்லை. எனவே எப்போதுமே நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. பல வழக்குகளின் தீர்ப்புகள் 'நீதிக்கு' அப்பாற்பட்டு இருக்கின்றன. எனவே கோர்ட் என்பதை ' நீதிமன்றம் ' என அழைக்காமல் " தீர்ப்பாயம்" என்று குறிப்பிடுவதுதான் சரி.

படிப்பகம் [illegible] யமிரன் கரியன்.

www.padippakam.com

# தமிழ் ஒளி

## அறிவித்தல்கள்!

புதிய முகவரி:
1225 St Marc:
#206 Montreal Que. H3H-2E7
தொலைபேசி 932-9893

* வாரந்தோறும் சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகி வந்த தமிழ் தென்றல் நேயர்கள் நலன் கருதி ஞாயிறு தோறும் இரவு 11.30 முதல் 12.00 மணிவரை ஒலிபரப்பாகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்..!!

  தமிழ் தென்றல் CFMB 1410 AM

* இலவச பிரெஞ்சு வகுப்புக்கள் Level I ; Level II ஏப்ரல் 10ம் திகதி ஆரம்பம்..!!!

* புதிய ஆங்கில வகுப்புக்களும் விரைவில் ஆரம்பமாகவுள்ளது!

ஆர்வமுடையோர் உடனே தொடர்பு கொள்ளவும்.

படிப்பகம்

# திரைப்படம் பற்றிய சில குறிப்புக்கள்

— சசி கிருஷ்ணமூர்த்தி

திரைப்படமென்ற கலைவெளிப்பாட்டுச் சாதனம் ஏறக்குறைய 90 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டது. ஒரு கலை வடிவத்தைப் பொறுத்தவரை 90 ஆண்டுகளென்பது மிகக் குறுகிய காலப் பகுதியே. ஓவியம், சங்கீதம், நடனம், நாடகம்போன்ற கலை வடிவங்கள் எத்தனையோ நூற்றாண்டு வரலாற்றையுடையன. திரைப்படம் அவ்வாறல்ல. எனினும் இக் குறுகிய வரலாற்றுக் காலகட்டத்தில் இது வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. கலை வெளிப்பாட்டுச் சாதனமென்ற வகையிலும், பொருளாதார ரீதியிலும் இவை சாத்தியமாகியுள்ளன. திரைப்பட நடவடிக்கைகள் இன்று ஒரு டையாகக் கொண்டதே சினிமாவென்ற திரைப்படமென்பது புலனாகின்றது. திரைப்படமென்ற கலைவடிவம் முதலாளித்துவ வளர்ச்சியோடே தோற்றம் பெறுகின்றது. உற்பத்தி தொடக்கம் விநியோகம், நுகர்ச்சி வரை திரைப்படங்கள் இயந்திரங்களோடு தொடர்பு கொண்டவை. இயந்திர தொழில் நுட்ப அறிவு வளராத ஒரு சூழ்நிலையில் இதன் தோற்றம் பற்றியோ, பயன்பாடு பற்றியோ எண்ணிக் கூடப் பார்க்க முடியாது. 1985ல் பிரான்சில் 'கபே ட பாரிஸில்' முதன்முதல் 'cinematography' என்ற திரைப்படத்தின் ஆரம்ப வடிவம் அறிமுகப் படுத்தப்பட்டது. 1897 ல் கோல்மன் என்பவரும், எநோக் ஹெக்டர் என்பவரும் சில காட்சிகளைப் படம் பிடித்தார்கள். சினிமாவின் வளர்ச்சிக்கு எடிசன் என்ற விஞ்ஞானி பெரும் பங்களிப்பைச் செய்தார். எனினும் இது ஒரு கலையாக வளரக் கூடிய சாத்தியக் கூற்றை அவர் நம்பவில்லை. 1931 ல் கதை ருசி, நிகழ்ச்சி ருசி என்ற அம்சங்கள் திரைப்படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனைச் சாதனையாக்கியவர் எட்வின் போட்டர் என்பவர். தொடர்ந்து அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பலர் மிக ஆவலோடு இதன் வளர்ச்சியில் அக்கறை



www.padippakam.com
படிப்பகம்

அறிவுத்துறையாகக் கூட வளர்ச்சியடைந்துள்ளன. பல பல்கலைக் கழகங்களில் இது பற்றிய படிப்பிற்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருக்கின்றது. தனியான நூல்நிலையங்களும், பாதுகாப்புக் கூடங்களும் திரைப்பட வளர்ச்சியோடு உருவாகியுள்ளன. இத்துறையைப் போல மிகக் குறுகிய காலத்தில் பிறிதொரு கலைத்துறை இவ்வளவு வேகத்தில் வளர்ச்சியடையவில்லையென்றே கூறலாம்.

அசைவைக் குறிக்கின்ற "கினேமா" என்ற கிரேக்கச் சொல்லை அடிப்படையாகக் கொண்ட kinematography என்ற சொல்லிலிருந்தே திரைப்படத்தைக் குறித்து நிற்கின்ற 'cinema' என்ற சொல் அறிமுகமாகியது. இதிலிருந்து அசைவை அடிப்படையாகக் காட்டினர். அமெரிக்காவில் D W. கிரிஃபித் என்பவருடைய பங்களிப்பு முக்கியமானது. இவர் பல திரைப்படத்துக்குரிய அடிப்படை அம்சங்களை அறிமுகப்படுத்தினர். closse - up, fade- out, dissolve என்று நாம், இன்றைய திரைப்படங்களில் பார்க்கின்ற தொழில் நுட்பங்களை அறிமுகமாக்கியவர் கிரிஃபித்தே. இவரைப்போல ருஷ்யாவைச் சேர்ந்த சேர்ஜி ஐஸன்ஸ்டீன் என்பவரும் முக்கியமானவர். திரைப்படம் ஒரு கலையாக வளரக் கூடிய சாத்தியக் கூறுகளை முன்னுணர்ந்து, இதில் அக்கறை காட்டிய இவர் திரைப்படக் கோட்பாடுகள் பலவற்றை முன்வைத்தார். இவரது Battleship potemkin என்ற திரைப்படம் இன்றுகூட நல்லதொரு படத்துக்கான எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.


படிப்பகம்
www.padippakam.com

www.padippakam.com

ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகிய இத்திரைப்படங்கள் அதே காலகட்டங்களிலேயே இந்தியாவிலும் அறிமுகமாகியது. ஆரம்பத்தில் ஐரோப்பிய திரைப்படங்களே காட்டப்பட்டன. பின்னர் இந்தியாவிலும் திரைப்படங்கள் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது ஒரு வியாபாரமாக வளரக் கூடியதாக இருந்த படியினால் பலரும் இதில் அக்கறை காட்டினர். தென்னிந்தியாவிலும் பலர் திரைப்படத் தயாரிப்பில் ஆர்வங் காட்டினர். 1916ம் ஆண்டிலேயே தென்னிந்தியாவில் 'கீசகவதம்' என்ற மௌனத் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. தொடர்ந்து பெருமளவில் தயாரிக்கப் பட்டன. ஆரம்பத்தில் இவை பேசாப் படங்களாக இருந்த படியினால் எல்லா மொழி பேசும் மக்களும் பார்க்கக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டன. ஆரம்ப காலத் திரைப் படங்கள் சமூகப் பார்வை கொண்டவையாகவும், மூட நம்பிக்கை, சாதிக்கொடுமை, பெண்விடுதலை என்பனவும் கையாளப்பட்டன. அக்காலத்தில் வளர்ச்சியுற்று வந்த தேசிய உணர்வு, விடுதலை வேட்கை என்பன பற்றியும் படங்கள் தயாரிக்கப்பட்டன. ஆயினும் கருத்து வெளிப்பாட்டுச் சாதனமாக அதில் அக்கறை காட்டப்பட்டதே

இச்சந்தர்ப்பத்தில், சிங்களத் திரைப் படங்களின் வளர்ச்சி பற்றியும் நாம் பார்க்க வேண்டும். மிகக் குறுகிய வளங்களும், திரைப்படம் பற்றிய தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி அவ்வளவாக இல்லாதிருந்துங் கூட இம்மொழி மூலம் பல தரமான திரைப் பட நெறியாளர்கள் உருவாகியுள்ளார்கள். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்ற கலைஞர் 1956ம் ஆண்டிலேயே 'ரேகாவா' என்ற வித்தியாசமான திரைப்படத்தை உருவாக்கிக் காட்டினார். 'கம்பெரலியா' என்ற அவரது திரைப்படம் சர்வதேச திரைப்பட விழாவொன்றில் பரிசொன்றைப் பெற்றுக் கொடுத்தது. இதன் மூலம் சிங்களத் திரைப் படத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தியவர் லெஸ்டர். இங்கும் வியாபார ரீதியான சினிமாக்களின் ஆதிக்கமிருந்துங்கூட பல திரைப்படங்கள் தரமானவையாக உருவாக்கப்படுகின்றன. தர்மசேன பத்திராஜா, வசந்தா ஒபயசேகரா, தர்மசிறி பண்டாரநாயக்க ஆகிய இளம் திரைப்பட இயக்குனர்கள், திரைப்படம் பற்றிய ஆழ்ந்த அறிவைக் கொண்டவர்களாக பல சாதனைகளை சிங்களத் திரைப்படத் துறையில் புரிந்து வருகின்றார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

அன்றி, அதன் கலாவெளிப்பாட்டுத் தன்மையில் அக்கறை கொள்ளப்படவில்லை. அதே காலப்பகுதிகளில் பிறநாடுகளில் திரைப்படத்தின் சாதனைகள் தென்னிந்திய சினிமாவைச் சற்றும் பாதிக்கவில்லை. பேசும் படமாக அறிமுகமாகிய போதுங்கூட அது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், அதிக லாபமீட்டும் வர்த்தக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. இன்றுவரை தமிழ்த் திரைப்படத்துறையை திரைப்படத்தின் அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்ளாத இரண்டாந்தர, மூன்றும்தர கலைஞர்களும், வியாபாரிகளுமே ஆக்கிரமித்துள்ளனர். இவர்கள் எல்லோரதும் குறிக்கோள்களும் பணமே. இதனால்தான் தமிழில் இதுவரை சர்வதேச தரத்துக்கு எட்டக்கூடிய திரைப்படங்கள் ஒன்றுவது உருவாக முடியவில்லை.

திரைப்படமென்பது முக்கியமாக பார்வைக்கானதொருஊடகம். (Viual Medium) இங்கு காட்சிப்படுத்தலே (Viualisation) முக்கியம். காட்சிப்படுத்தும்போதுகமராவின் பங்கு இன்றியமையாதது. அதாவது ஒளிப்பதிவு, இதனால்தான் திரைப்படம் கமராவினால் எழுதப்படும் கவிதை என்று சொல்லப்படுகிறது. மனிதனது புறநிலை சார்ந்த விடயங்களை மாத்திரமன்றி அவனது அகவுணர்வுகளையும் வெளிக்கொண்டு வரும் ஆற்றல் கொண்டது திரைப்படம். மனிதரின் உணர்வுகளை, வாழ்வின் உண்மைத் தன்மைகளை, மனித உறவின் பல்வேறு அம்சங்களை உரிய முறையில் அழகியலோடு வெளிப்படுத்தப்படும்போது நல்லதொரு திரைப்படம் உருவாக்கப்படுகின்றது. அது ஒரு கலையாக மனிதனை ஆகர்ஷிக்கின்றது. திரைப்படத்துக்கு படத்தொகுப்பு, இசை என்பன முக்கிய அம்சங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

திரைப்படம் ஒரு கலையாக சர்வதேச ரீதியில் பல்வேறு பரிணாமங்களைக் காட்டி நிற்கின்றது. பல திரைப்பட மேதைகள் வியக்கத்தக்க சாதனை புரிந்துவருகின்றார்கள். இந்தியாவிலும், அது ஒரு முக்கியமான வியாபாரமாக வளர்ந்து விட்ட நிலையிலும் கூட, சத்தியஜித்ரே, மிருணாள் சென் போன்ற திரைப்பட மேதைகள் பல உன்னத திரைப்படங்களை உருவாக்கியுள்ளனர். கௌதாம் கோஷ், கோவிந்நிஹாலினி, ஸியாம் பெனகல் போன்றவர்களும் ஹிந்தி, வங்காள மொழிகளில் பல உன்னத திரைப் படங்களை உருவாக்கியுள்ளார்கள். கேரளாவைச் சேர்ந்த அடூர் கோபாலகிருஷ்ணன், அரவிந்தன் போன்ற நெறியாளர்கள் சர்வதேச கணிப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால் நம் தமிழ்த் திரைப்படத்தைப் பொறுத்த வரை பெருமைப்படத்தக்க எதையும் இதுவரை நாம் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மையாகும். தமிழில் திரைப்படம் முக்கியமானதொரு கைத்தொழிலாக வளர்ந்த தண்ணீர்', 'அழியாத கோலங்கள்,' 'பூட்டாதபூட்டுக்கள்' என்பன ஓரளவு வித்தியாசமான திரைப்படங்களே.

திரைப்படம் பற்றிய சரியான அறிவோடு, கலையீடுபாட்டோடு சில இளந் தலைமுறையினர் தமிழ்த் திரைப்படத் துறையில் அக்கறை காட்டி வருகின்றனர். இவர்கள் மிகச் சிலரேயாயினும் இவர்கள் முற்றுமுழுதான வர்த்தக ரீதியானதாவோ, அன்றி கலைத்தரமானதாகவோ இல்லாது, இரண்டுக்கும் இடைப்பட்டதாக, ஆனால் ஓரளவு திரைப்பட ரசனையை வளர்க்கும் விதத்திலான 'இடைப்பட்ட சினிமா' பலவற்றை உருவாக்கி வெற்றி கண்டுள்ளார்கள். இவர்களுள் ஜோன் ஆபிரகாம். ஜெயபாரதி, ருத்திரையா, பாலுமகேந்திரா, மகேந்திரன் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள், பாலுமகேந்திராவின் 'அழியாத கோலங்கள்' தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல் கல். இதுவரை 'கேட்டு'


படிப்பகம்

www.padippakam.com

துள்ளது. வியக்கத்தக்க பல தொழில் நுட்ப வியலாளர்களை தமிழ்த் திரைப்படத்துறை கொண்டிருக்கிறது. ஆயினும் ஒரு கலையாக வளர்ச்சியுறவில்லை. இது பார்வைக்கான தொருவடகம் என்பதோ, சமூக யதார்த்தங்களை இலகுவாக, உண்மைத் தன்மைகளோடு வெளிக்கொண்டுவரக் கூடிய சாதனமென்றோ பார்க்கப்படவில்லை. வீரவசனம் பேசுவதும், பூங்காக்களில் ஓடிப்பிடிப்பதும், பாசமென்று கண்ணீர் விடுவதுமே நடிப்பாக தமிழ்த்திரைப்படத்தில்காட்டப்படுகின்றது. கதை நடைமுறை வாழ்க்கையோடு ஒட்டியிருக்காது எல்லாப் படங்களுமே ஏதோ ஒரு வாய்ப்பாட்டினடிப்படையில் (formula) அமைந்திருக்கும். பொதுவாக கற்பனை கதை மாந்தர்களையும், கற்பனை வாழ்க்கையையுமே நாம் தமிழ் திரைப்படங்களில் காணமுடிந்தது. எனினும் விதிவிலக்கான திரைப்படங்கள் இடைக்கிடையாவது தோன்றுமலில்லை. 'பாதை தெரியுது பார்', 'திக்கற்ற பார்வதி', 'தாகம்' 'அவள் அப்படித்தான்', 'அக்ரஹாரத்துக் கழுதை', 'தண்ணீர் ரசிக்கக்கூடியதாக இருந்துவந்த தமிழ் சினிமாவை 'பார்த்து' ரசிக்கக்கூடிய அளவிற்கு அது தரமுயர்த்தியது. இவரது பிற படங்களில் வியாபாரத்தனங்கள் இருந்த போதும் ஒளிப்பதிவு நேர்த்தி, காட்சிப்படுத்தும் விதம் வித்தியாசமானவை. திரைப்படத்தில் அடிப்படையம்சங்களைப் புரிந்து கொண்டு, சமூகப் பொறுப்புணர்வோடு கையாளத் தெரிந்தவர் மகேந்திரன். இவரது 'உதிரிப்பூக்கள்', 'பூட்டாத பூட்டுக்கள்', தமிழில் முக்கியமான திரைப்படங்கள். இவரது 'நண்டு', 'மெட்டி', 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' என்பனவும் வித்தியாசமான அனுபவத்தை ஏற்படுத்தும் திரைப்படங்களே.

இன்று தமிழ்த் திரைப்படத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் சிறிதாயினும் ஆரோக்கியமான முறையில் வளர்ச்சியுறுமாயிருந்தால் நிச்சயம் தமிழ்த் திரைப்படத் துறையும் சர்வதேச தரத்துக்குதன் தரத்தை உயர்த்தக்கூடும். — நன்றி: விழிகாட்டி.


படிப்பகம்

www.padippakam.com


# ஸ்ரீ சிவா ஜுவலறி

இலங்கையை நிலைநாட்டும்
வன்மையும் வாழ்பவத்தில்
கைதேர்ந்த நகை செய்யும்
வல்லுனர்களால்
தயாரிக்கப்படும் நகைகளுக்கு
ரொறன்ரோவில் முதலிடம்
விரும்பிய டிசைன்கள்
நங்கையர் விரும்பும்
நவநாகரிக வித விதமான
ஆபரணங்கள்
அனைத்திற்கும் சிறந்த ஒரே
இடம்.

**721 Bloor St. W., Suite #2c,**

**Toronto, Ont.**

**(416) 531-4867**

ஆபரணங்கள் அழகுக்கும்

உங்கள் முதலீட்டுக்கும்

**வியாபார நேரம்**

| | |
|---|---|
| செவ்வாய் - வெள்ளி | 12.30-7.30 |
| சனி - ஞாயிறு | 10.00 - 8.00 |
| திங்கள் | CLOSED |

- guaranteed 22 karat gold, bangles, thalikkodi, rings, chains, wedding and engagement jewellery, diamond rings, and other ornaments of strictly the best quality
- unbeatable lowest prices
- custom-made jewellery
- minor repairs and adjustments

**SRI SIVA**
*Jewellery*

Subway: Christie




படிப்பகம்

கவிதை

# தாய்க்கொரு கடிதம்

அம்மா....!
உன் அன்பு மகன்....
எழுதுவது...!
நெஞ்சுக்.. கிடைத்து..
உன்....
நெஞ்சின் நெருப்பு...!

அம்மா.... என்...
அன்புத் தாயே...!
சின்ன வயதில்...
சிறிதாய் இருக்கையில்....
ஆன 'க' காட்டிய
அந்த எழுத்தும்....
என்பது தாண்டும்
இன்றொரு வயதில்
எழுதிய எழுத்தும்...
இன்னும் ஓவியம்...!
ஓ.. என் தாயே!
தமிழ் என்றும்..
இளமை அல்லவா!

www.padippakam.com

அம்மா....!
என் அன்புத் தாயே!
இந்த மாக் கடல்.....
எழுப்பும் அலையில்....
சொந்தமாய் இருக்கத்
துடிக்கும் உன்னையும்....
என்....
தேசத்து மக்களையும்..
கண்டேன்...!

பூசும் பனியில்....
முகம் தெரியா... இருட்டில்...
வீசும் அந்த சூரியனின்..
'கிரணம்'...
வெடிச் சத்தம்....
என்... தேசப் படத்தை....
உலகப் பந்தில்.....
ஒரு நாள்....

வரையும்....!

தண்ணீர் கடலில்....
கலந்தது ஒரு நாள்...!
இன்று....
சிவப்பாய் ஜொலிக்கிறது...
என் மனம்...!

படிப்பகம்

www.padippakam.com

அம்மா.....
நானும்... நீயும்...
நாளை.. போவோம்...
எம்... தேசம்...
புதிதாய்ப் பிறக்கும்...
அந்த விழாவில்
என் மகன்...
இருப்பான்....!

அம்மா....!
என் அன்புத்...
தாயே...!
தொடரும் கவிதம்
இன்னும் சொல்லும்...!
அதுவரை விடை பெறும்
உன்....
அன்பு மகன்...!

தமிழ் பிரியா

படிப்பகம்

www.padippakam.com

-செழியன்

# ஒரு மனிதனும்.. எந்தன் தேசமும்...

## 6

கடற்படையினரின் படகில் இருந்து நூலேணி வழியாக சில கடற்படை வீரர்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் கீழே குதித்தனர்.

" பயந்தது போல் நடந்து கொள்ளாதே. எவ்வளவு அடி உதை விழுந்தாலும் அகதி என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லாதே" ரமணி கதிரேசனிடம் முணுமுணுத்தான். 'சரி' என்பதுபோல் கதிரேசன் கண்ணை சிமிட்டி ஆமோதித்தான்.

" உங்களுக்கும் தான், என்ன?
மிரண்டு போய் இருந்த ஆரணியும் சிவகாமியும் தலையாட்டினர்.

" எய், எய், அழுவுர சத்தம் போட்டா சூட் பண்ணுறது" ஒரு நேவிக்காரன் பெரிதாக சத்தம் போட்டு மிரட்டினான். "எங்கடா படகுகாறன் ? இன்னொரு நேவிக்காரன் துப்பாக்கியை தூக்கி நீட்டியபடி கேட்டான்.

படிப்பகம்

www.padippakam.com

யாரும் பேசவும் இல்லை. அசையவுமில்லை. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நேவிக்காரன் அருகில் இருந்த ஒருவரின் முகத்தில் குத்து விட்டான்.

" ஐயோ என்ட அம்மா" – பயங்கரமான ஒரு அலறல் எழுந்தது.

" ஐயா ஒட்டி கடலிலை குதித்து தப்பிவிட்டார். "– உதவி ஒட்டி ஒருவர் குரல் கொடுத்தார்.

" ஏய் இங்க வா, இங்க வா, யாறடா நீ "....

" ஐயா ...நான்...."

" அடேய் நீ தான்டா ஒட்டிக்காறன் ...."

" இல்லை, ஐய்யா...நீங்கள் வாறதைக் கண்டதும் ஒட்டி கடலிலை குதித்து விட்டார். இந்த எல்லாரையும் கேட்டுப் பாருங்கோ ஐயா... ."

" நீ எங்கடா போறது "

" ஐயா....அ..கதி..யாய் .. போறம் ..."

" அகதி.... எத்தனை டைகரடா தப்பிப் போறது."

"........."

" எங்களுக்கு எல்லாம் தெரியும் ... இந்தியாவுக்கு இதல டைகர் தப்பிப் போறது என்ன ?... கொஞ்சம் இருங்க எல்லாறும் "....

கேலியாக கூறிய படி ஒரு நேவிக்காரன் ஒரு சூட்கேசை இழுத்து அதன் மேல் துப்பாக்கியால் குத்தினன்.

படிப்பகம்

www.padippakam.com

" யார்ட இது "

"..........."

ஒருவரும் பதில் கொடுக்கவில்லை.

" எய்"...,என்று நேவிக்காரன் உறுமினன்.

"மடார்" என்று அப்பாக்கி முனையால் பின்னுக்கு யாருக்கோ அடி விழுந்தது.

" ஐயா என்ட இல்லையய்யா ...." அடிவிழுந்த வேகத்தில் அலறலாக பதில் வந்தது.

" இ...து... என்னுடை...." ஒரு பெண் பயம் கலந்த தயக்கத்துடன் கூற முயன்ருர்.

" பெட்டியை தெற....தெற...."

அப்பெண்மணி சூட்கேசை திறப்பால் திறக்க முயற்சித்தார். பயமும் பதட்டத்துடன் இருந்ததால் திறக்க முடியவில்லை சூட்கேஸ் திறபடவில்லை என்றதும் அப்பெண்ணுக்கு மேலும் பதட்டமாக போய்விட்டது. அப்பெண்ணின் நிலைமையைப் புரிந்து கொண்ட கதிரேசன் திறப்பை வாங்கி சூட்கேசை திறந்தான்.

சூட்கேசில் இருந்த உடுப்புகளை கிளறி அந்த நேவிக்காரன் பார்த்துவிட்டு முடினன்.

" நீ எறி மேல போ"....



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொருவராக அவர்களது பெட்டிகள் சோதனை செய்யப்பட்டு நூலேணி வழியாக நேவிக்காரரின் படகில் ஏற்றப்பட்டனர்.

சிறீ லங்கா கடற்படையினரால் கைது செய்யப் பட்ட அவர்கள் அனைவரும் கடற்படைப் படகின் மேற்தளத்தில் வரிசையாக இருத்தி வைக்கப்பட்டனர். அவர்களது பெயர் விலாசங்களை ஒரு அதிகாரி வந்து எழுதினுன். இதனை பார்வையிட்டவாறு அந்த கடற்படை படகின் கேப்டன் சற்று தூரமாக நின்ருன். கேப்டனின் பார்வை அடிக்கடி ரமணியை மேய்ந்து விட்டுச் சென்றது.

" உங்களைத்தான் அடிக்கடி அந்த நேவிக்காரன் முறைத்து முறைத்துப் பார்க்கிருன் " தாழ்ந்த குரலில் எச்சரிக்கை செய்தாள் ஆரணி.

ஆரணி கூறிய பக்கமாக எதேட்சையாக பார்ப்பது போல்ரமணி திரும்பிப் பார்த்தாள். அங்கு நின்று கொண்டிருந்த கேப்டன் தன்னை கூர்மையாக அவதானிப்பதை உணர்ந்ததும் ஒரு பெரும் அபாயம் சூழ்ந்து கொண்டிருக்கிறது என உணர்ந்தாள்.

கதிரேசனுக்கும் இதனை கூறி எச்சரிக்கை செய்வோம் என நினைத்து அவன் எங்கிருக்கின்ருன் எனத் தேடினுள் கதிரேசனுக்கு பக்கமாக ஒரு நேவிக்காரன் நின்று கொண்டிருந்தான். இச்சமயத்தில் அவனுடன் பேசிக் கொள்வது நேவிக்காரனின் சந்தேகத்தை தம் பக்கம் திருப்பிக் கொள்வதாகவே இருக்கும்.

அந்த நேவிக்காரன் எப்போது அவ்விடத்தை விட்டு போவானே என சபித்தவாறு மறுபடியும் கேப்டன் என்ன செய்கிருன் என திரும்பிப் பார்த்தாள். அந்த இடத்தில் கேப்டனை காணவில்லை. வேறு எங்காவது நிற்கிருஞ என சுற்றியும் பார்த்தாள். அங்கும் அவனைக் காணவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

" அப்பாடா " என்று ரமணிக்கு பெரிய நிம்மதி ஏற்பட்டது. கேப்டன் தன்னையே கூர்மையாக கவனிப்பது போல் இருந்தது. எல்லாம் தனது பிரமையாகத்தான் இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

" அரனி கேப்டன் தனது ரூமுக்கு போய்விட்டான் போல கிடக்கு பெரிதாக எதும் பிரச்சனை வராது நீர் பயப்படாமல் இரும்" அரனை சாந்தப்படுத்துவதற்காக இதை கூறிய போதும் ரமணிக்கு கூட உள்ளூர ஒரு வித நம்பிக்கை ஏற்பட்டது.

" இப்ப எங்களை எங்க கொண்டு போகினம்"

" மன்னார் கரைக்குத்தான் கொண்டு போறாங்கள், அங்க கொண்டு போய் . G.A யிட்ட பொறுப்பு கொடுப்பார் என்றுதான் நான் நினைக்கிறன். இந்தியாவுக்கு போகிற சாதாரண அகதிகள் என்றுதான் எங்களை நினைக்கிறாங்கள் ....." ரமணி கூறிக் கொண்டிருக்க.

" எய் ர...ம...னி நீதானே." ஒரு நேவிக்காரன் வந்து கேட்டான்.

" ஓம் " திடுக்கிட்டுப் போன ரமணி கூறினான்.

" எழும்பு ...எழும்பு... கேப்டன் விசாரணைக்கு உன்னை கொண்டு வரட்டாம்" ரமணியின் கழுத்தைப் பிடித்து எழுப்பி கேப்டனின் அறைக்கு அவனை தள்ளிக் கொண்டு போனான்.

(தொடரும்).


படிப்பகம்

www.padippakam.com

* STRICTLY THE BEST QUALITY GUARANTEED 22Kt GOLD, BANGLES AND ENGAGEMENT RINGS.

*UNBEATABLE LOWEST PRICES




*SPECIALIZED IN MALIYA MUTTU, PRABHA AND THALIKODI CHAINS

*WE DO MINOR REPAIRS AND ADJUSTMENT

# J.P.S. jewellers inc.

5991 VICTORIA Ave., Suit 2,
MONTREAL, QUEBEC H3W 2H6
TEL: (514) 343-5333
TELEX: MTL 05-25-134



* உத்தரவாதமுள்ள 22 காரட்டில் அமைந்த வளையல்கள், நிட்சயார்த்த மோதிரங்கள்.

* மிகக் குறைந்த விலையில்

* தரமான மல்லிகை முத்து, பிரபா மற்றும் தாலிக் கொடி

* மற்றும் சிறு திருத்தவேலைகட்கும்

MONDAY CLOSED
TUESDAY-SATURDAY
10 A.M.-7.30 P.M.
SUNDAY
12 NOON-8 P.M.



படிப்பகம்

www.padippakam.com

WITH THE BEST COMPLIMENTS FROM

# WOODLANDS

A FINE TRADITION IN INDIAN COOKING - VEGETARIAN AND NON - VEGETARIAN

SPECIALIZING IN SOUTH AND NORTH INDIAN DISHES - CATER PARTIES

வூட்லேண்ட்ஸ்

உணவகம்.

தென்னிந்திய தமிழ் உணவு வகைகள்

இட்லி
வடை
மசாலா தோசை
ஊத்தப்பம்
சாம்பார்
சைவ உணவு வகைகள்.

IDLI
VADA
MASALA DOSA
UTHAPPAM
SAMBAR
VEGETARIAN THALI
VEGETARIAN PLATE
AND MORE

1241, GUY(CRNR ST.CATHERENE)
MONTREAL , QUEBEC
TEL: (514) 933-1553

படிப்பகம்


www.padippakam.com

விளம்பரமின்றி வியாபாரமில்லை

# தமிழ்த்தென்றல்

வியாபாரமின்றி விளம்பரமில்லை

மொன்றியால் தமிழ் நேயர்களுக்காக
பல வருடங்களாக மொன்றியால் CFMP1410
அலை வரிசையில் ஒலிபரப்பிவரும்
**தமிழ்த்தென்றல்** இனிய பாடல்கள்,
உலகச்செய்திகள், இலக்கிய விருந்து
போன்ற பல சுவையான அம்சங்களுடன்
காற்றில் மிதந்து வருகின்றது.
உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள்
விழாக்களை அறியத்தரவும்,
வியாபார ஸ்தலங்களை விளம்பரப்படுத்தவும்,
**தமிழ்த்தென்றல்** உங்களோடு இணைகின்றது.
நிகழ்ச்சியின் விமர்சனங்களை **தென்றல்**
எதிர்பார்க்கின்றது.





படிப்பகம்

www.padippakam.com


MUKESH JEWELLER



முகேஷ்

ஜுவலர்ஸ்

தரமிகுந்த இந்திய
தங்கநகைகளுக்கும்
நங்கையர் நாடும் நவ
நாகரீக தங்க,வைர
வெள்ளி ஆபரணங்க
ளுக்கும், நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்.
உங்கள் தேவைகட்கேற்ப
ஆபரணங்களை அழகு
பெறத்தயாரிப்பதற்கும் புனரமைப்
பதற்கும் இன்றே நாடுங்கள்

620 கற்காட் வீதி
CATCHCART St.

320 அறை
ROOM

தொலைபேசி
TELEPHONE 861-3110


படிப்பகம்